DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.101/2024 | Deposition of Witness for : PW1 |
| Name : உதயகுமார் | Father/Husband Name : மணி |
| Age : 57 | Village : குலசேகரன்குடியிருப்பு |
| Taluk : சாத்தான்குளம் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02 February 2026.
A1 to A5 absent. Petition U/s.355 BNSS filed and allowed.

**<u>முதல் விசாரணை</u> :–**

1. நான் தற்போது குலசேகரன்குடியிருப்பில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது ஊரைச் சேர்ந்தவர்கள்.

2. கடந்த 01.03.2024 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் நான் சாத்தான்குளம் நீதிமன்றம் அருகே இரவு உணவு வாங்கிவிட்டு வேதக்கோவில் அருகே செல்லும்போது அங்கு எதிரிகள் அனைவரும் நின்று கொண்டிருந்தார்கள். அப்போது முத்துகிருஷ்ணன் ஓடிவந்து என்னை புன்டா மவனே, தேவடியா மவனே, உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி, பின்னால் இருந்து கீழே தள்ளிவிட்டார். நான் ஏன் இவ்வாறு செய்கிறாய் என்று கேட்டேன், அதற்கு எதிரி தினேஷ் கம்பியால் முதுகில் மற்றும் வலது மார்பு இடுப்பிலே அடித்தார். ஜெயப்பாண்டி சூடு கம்பியால் வலதுபுற மார்பில் அடித்தார். எதிரி மாடசாமி கம்பியால் எனது வலது பக்க புருவத்தில் அடித்தார். எதிரி மாதவன் கம்பியால் என்னை தாடையில் அடித்தார் மேலும் முழங்கையில் என்னை அடித்தார். எதிரிகள் அடித்ததால் எனக்கு முதுகில் எலும்பு முறிவு ஏற்பட்டது. தாடையில் அடித்ததால் எனது பற்கள் இரண்டும் போய்விட்டது. எதிரிகள் பக்கத்து வீட்டைச் சேர்ந்த கலையரசி என்பவரின் பாத்ரூமை உடைத்துவிட்டார்கள். நான் அதை கூலிக்காக அள்ளியதால் எதிரிகள் அதன்காரணமாக என்னை அடித்தார்கள். இந்த சம்பவத்தைப் பார்த்த அருகில் உள்ளவர்கள் விலக்கிவிட்டார்கள்.

3. காயம்பட்ட நான் மறுநாள் காலை 8.30 மணியளவில் வலி அதிகமாக இருந்ததால் நான் 108 ஆம்புலன்ஸ்சில் சாத்தான்குளம் மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்தேன். அங்கு 1வாரம் நான் சிகிச்சையில் இருந்தேன். எனது புருவத்திலும், தாடையிலும் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டது. நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.



DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.02 14:22:00 +0530

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

4. நான் முதல் விசாரணையில் சொல்லியதைத்தான் போலீசார் விசாரணையிலும், மருத்துவரிடமும் சொல்லியுள்ளேன் என்றால் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன், மருத்துவரிடம் எதிரிகள் என்னை அடித்தார்கள் என்று சொன்னேன். என்னுடைய வீடு குலசேகரன்குடியிருப்பில் மேலத்தெருவில் உள்ளது என்றால் சரிதான். ப.சா.2 கொடிமரத்தங்கம் என்பவர் வீடு குலசேகரன்குடியிருப்பில் அம்மன்கோவில் தெருவில் உள்ளது என்றால் சரிதான். ப.சா.3 வீடு நடுத்தெருவில் உள்ளது என்றால் நடுத்தெருவிற்கும் கொஞ்சம் தள்ளி உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் ப.சா.2 மற்றும் ப.சா.3 ஆகியோர்களது வீட்டிற்கும் இடையே குறைந்தது 200 மீ தொலைவு தான் இருக்கும் என்றால் சரியல்ல, 50 அடி தூரம் இருக்கும். நான் தூரம் 50 அடி என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. சம்பவம் நடந்த தினத்தன்று இரவு 11.30 மணிக்கு பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் காலை 8.30 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். என்னுடைய ஊரில் இருந்து சாத்தான்குளம் காவல்நிலையமும், சாத்தான்குளம் அரசு மருத்துமவனையும் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். பொதுவாக நடந்து வந்தால் கூட 1 மணி நேரத்தில் என்னுடைய ஊரில் இருந்து சாத்தான்குளத்திற்கு வந்துவிடலாம் என்றால் எனக்கு அடிபட்டு இடுப்பு எலும்பு ஒடிந்திருந்ததால் என்னால் வர முடியாது. நான் இதை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. நான் பிள்ளையார் என்பவரை கொலை செய்த வழக்கில் 14 வருடம் தண்டனை பெற்று 2009 ஆம் ஆண்டு சிறையில் இருந்து வெளியில் வந்தேனா என்றால் பிள்ளையார் என்பவரை கொலை செய்த வழக்கில் குற்றம் நிரூபணம் செய்யப்பட்டது உண்மைதான், நான் 1995 ஆம் ஆண்டு சிறையில் இருந்து வந்துவிட்டேன். 19.08.2024 அன்று என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் மீது இடப்பிரச்சனை சம்பந்தமாக நான் கம்பியால் தாக்கியதாக CC 78/2025 என்ற வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்குகளை தவிர இன்னும் பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் எங்கள் ஊரில் உள்ள CSI சர்ச் சம்பந்தமாக சாத்தான்குளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சர்ச்சின் ஆதரவாளர் என்பதால் வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் இரவு 10.30 மணிக்கு சாத்தான்குளம் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் அதை நான் பார்க்கவில்லை. இரவு 10.30 மணிக்கு நான் மது போதையில் 4 ஆவது எதிரியின் வீட்டுக் கதவை அடித்து உடைத்ததால் அவர் அவசர காவல் உதவி எண்ணை அழைத்து தகவல் தெரிவித்ததால் போலீசார் சம்பவ இடம் வந்தார்கள் என்றால் சரியல்ல. (CCTV Camera Footage புகைப்படத்தை எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த வழக்கறிஞர் சாட்சியிடம் காண்பித்து கேள்வி எழுப்பினார்) சம்பவம் நடந்த தினத்தன்று 4 ஆவது எதிரி மாடசாமி என்பவரின் வீட்டில் பதிவாகியிருக்கும் CCTV Camera footage ல் நான் 4 ஆவது எதிரியின் வீட்டின் கதவை கல்லால் உடைக்க வந்தது தெரியவந்துள்ளது என்றால் சரியல்ல.

8. நான் என்னுடைய புகார்வாக்குமூலத்தில் எத்தனை நபர்கள் என்னை தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் 5 பேர் தாக்கியதாக கூறியுள்ளேன். என்னுடைய முதல் விசாரணையில் என்னை எத்தனை நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளேன் என்றால் 5 பேர் தாக்கியதாக கூறியுள்ளேன். மருத்துவரிடம் எத்தனை நபர்கள் தாக்கியதாக



DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.02.02 14:22:11 +0530

கூறியுள்ளேன் என்றால் மருத்துவரிடம் என்னை தாக்கினார்கள் என்று கூறினேன். நான் மருத்துவரிடம் அடையாளம் தெரிந்த 6 நபர்கள் என்னை தாக்கியதாக கூறிவிட்டு, தற்போது மருத்துவரிடம் என்னை எதிரிகள் தாக்கியதாக மட்டும்தான் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. நான் என்னுடைய புகார் வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளபடி எதிரிகள் என்னை உண்மையிலேயே தாக்கியிருந்தால் எனக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை தேவைப்பட்டிருக்கும் என்றாலும் நான் 8 மணிநேரம் தாமதமாகத்தான் மருத்துவ சிகிச்சை பெற்றுக்கொண்டேன் என்றால் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு யாரும் இல்லை, நான் தனியாக இருந்ததால் தான் எதிரிகள் என்னை தாக்கினார்கள். என்னுடைய புகார் வாக்குமூலத்தில் எனக்கு அவமானம் ஏற்பட்டதாகவோ, பயம் ஏற்பட்டதாகவோ குறிப்பிடவில்லை என்றால் நான் அடிபட்டதற்காகத்தான் நான் புகார் வாக்குமூலம் அளித்தேன், அவ்வாறு எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை.

10. நான் சர்ச் ஆதரவாளர் என்பதால் எனக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது, அதை மனதில் வைத்துக்கொண்டு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று 10.30 மணிக்கு 4 ஆவது எதிரியின் வீட்டுக் கதவை உடைத்துவிட்டு என் மீது புகார் கொடுத்துவிடுவார்கள் என்ற பயத்தில் நானே தன்னிச்சையாக காயத்தை ஏற்படுத்திவிட்டு மறுநாள் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்து எதிரிகள் மீது புகார் அளித்துவிட்டு, சர்ச்-ன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, என்னிடம் CCTV Camera ஆதாரங்கள் உள்ளது. நான் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் அளித்த பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சுமார் 1 1/2 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது என்றால் நான் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தேன் அதனால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. நான் சொன்ன மாதிரி எதிரிகள் என்னை உண்மையிலேயே தாக்கியிருந்தால் காலதாமதம் ஏற்பட்டிருக்காது என்றாலும் நானே காயத்தை ஏற்படுத்தியிருந்ததால் தான் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் உண்மையிலே நடைபெறததால் தான் காவல்துறையினரிடமும், முதல் விசாரணையிலும், மருத்துவரிடமும் நான் முன்னுக்குப்பின் முரணான செய்திகளை குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போன்று எதிரிகள் எந்தவிதமான குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.02.02 14:22:17 +0530

Judicial Magistrate, Sathankulam.